# மலையகத் தமிழர் அடையாளம்: மலையகத் தமிழிலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

க. சிந்துஜா[1], க. அருந்தாகரன்[2]

*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை[1, 2]*

[1]sindhujasindu1020@gmail.com

**ஆய்வு பின்னணி**

இந்த ஆய்வானது மலையகத் தமிழர்களது அடையாள நெருக்கடிகள் குறித்து ஆராய்கிறது. தென்னாசியாவில் இன்றைக்கும் தங்களுடைய இருப்பு மற்றும் அடையாளம் என்பனவறறை நிறுவுவதிலும், காப்பதிலும் சவால்களை எதிர்கொண்டிருக்கின்ற ஒரு சமூகமாக மலையக சமூகம் காணப்படுகின்றது. இலங்கையின் புராதன பண்பாட்டு பிராந்தியங்களில் ஒன்றான மலையகம் காலனிய நிதிமூலதனத்தையும், அதன் பொருளாதார நலன்களையும் முதலாளித்துவ ஏகபோகத்தையும் ஈட்டுவதற்காக தங்களுடைய மூலபண்பாட்டிலிருந்து வேரோடு கிளப்பப்பட்டு பதிகை செய்யப்பட்ட கூலிகள் என அழைக்கப்பட்ட தென் இந்தியத் தமிழ் அடிமைகளால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு பிராந்தியமாகக் காணப்படுகிறது. சுதந்திரத்திற்கு பிந்திய இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பெரும் பங்களிகளாகக் காணப்படும் அவர்கள் இலங்கையின் அரசியல் பொருளாதாரம், பண்பாடு என யாவற்றிலும் பண்பாட்டுப் புறத்திகளாக, விளிம்புநிலைப்படுத்தபட்டவர்களாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது 200 ஆண்டு கால மலையக இலக்கியத்திற்கும் பொருந்தும். அது அவர்களது வாழ்க்கைச் சுமைகளை, ஒடுக்குமுறைகளை, அதற்கு எதிரான விடுதலைக்கான ஒரு போராட்டத்தினை பதிவு செய்துள்ளது. அவ்வகையில் அது அவர்களுடைய பண்பாட்டை, அடையாளத்தை பெருமளவுக்கு ஒன்றுதிரட்டியுள்ள சுவடிகளாகக் காணப்படுகின்றன. அதே சமயம் அவை ஈழத்து தமிழிலக்கியம் எனும் எல்லைக்குள் பெருமளவுக்கு உள்வாங்கப்படாத எல்லைக்கு வெளியில் அதிகம் வைத்திருக்கப்படுகின்ற ஒள்றாகவே காணப்படுகின்றன. ஆனால், மலையக தமிழிலக்கியம் இல்லாமல் தமிழிலக்கியத்தை முழுமைப்படுத்த முடியாது. அவ்வகையில், அதனைச் சுவடிநிலைப்படுத்துவதற்கான சமூக இலக்கியத் தேவையே இந்த ஆய்வுக்கான பின்னணி ஆகும்.

**ஆய்வுப் பிரச்சனை**

தமிழிலக்கிய பண்பாட்டின் ஒரு பகுதியாக மலையகத் தமிழிலக்கிய பயில்பரப்பு காணப்படுகிறது. இந்த இலக்கியங்கள் தங்களுடைய 200 ஆண்டு கால ஒடுக்குமுறைகளையும் ஒடுக்குமுறைக்கு எதிரான அவர்களின் போராட்டத்தையும் பேசும்பொருளாக கொண்டுள்ளது எனினும் ஆனால் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டின் பங்களிகளாக இருக்கும் இவர்களை சமூக பண்பாட்டு, பொருளாதார வரலாறு எழுதப்படாது விடப்பட்டது போல அவர்களுடைய கலை இலக்கிய வரலாறு, பண்பாட்டு வரலாறு எழுதப்படவில்லை. அதேநேரம் அவை கோட்பாட்டுப் பின்னணிகள் சார்ந்து வாசிக்கப்படவில்லை என்பதும் முக்கிய பிரச்சனையாக காணப்படுகின்றது. இதனால் தமிழிலக்கிய பண்பாடு மலையகத் தமிழ் பண்பாட்டு வரலாற்றையோ அல்லது வரலாற்றின்

வகிபங்கையோ, மாறி வருகின்ற உலக இலக்கிய ஒழுங்கில் இந்த இலக்கியத்தை சூழமைவுப்படுத்தி பார்க்கவோ முடியாமல் இருப்பது இந்த ஆய்வின் பிரச்சனையாகும்.

### ஆய்வு நோக்கும் இலக்குகளும்

மலையகத் தமிழிலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு மலையகப் பண்பாடு அதன் உருவாக்கம் எதிர்கொண்ட சவால்கள், எதிர்கொண்ட முறைமைகள் அதற்குப் பின்னால் இருந்த அதிகார செயல்முறைகள், அதன் நுண்அரசியல் தன்மைகள், அதன் வெளிப்பாட்டு முறைகள் முதலிய அம்சங்களை திரைவிலக்குவதன் மூலம் மலையக மக்களது இலக்கிய ஆக்கத்தின் பல்பரிமாணங்களைப் புரிந்து கொள்ளலும், கோட்பாட்டுப் பின்னணியில் அவற்றை நிலைநிறுத்தலும் ஆகும். இவ்வாய்வின் இலக்குகள் ஆவன:

- மலையகத் தமிழர் என்ற எண்ணக்கருவினை வரையறுத்தல்.
- மலையகத் தமிழ் இலக்கியத்தினுடைய சமூக, தத்துவ, அழகியல் அடிப்படைகளை வரையறை செய்தல்.
- மலையகத் தமிழ் சமூகம் எதிர்நோக்கும் அடையாள நெருக்கடிகளை இனங்காணுதல்.
- அடையாள நெருக்கடியை பேசுவதில் மலையகத் தமிழ் இலக்கியத்தினுடைய இடத்தினை மதிப்பிடுதல் ஆகியவை இந்த ஆய்வின் இலக்குகளாகும்.

### ஆய்வு முறையியல்

இந்த ஆய்வானது இனவரைவியல், உளவியல், பின்நவீனத்துவ, காலனித்துவ கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு பண்புசார்/ விபரணமுறையிலான ஆய்வாக முன்னெடுக்கப்படுகிறது. மலையகப் பண்பாட்டினை விளங்கிக்கொள்வதற்கு இனவரைவியலும் அவர்களின் படைப்புகளினூடாக வருகின்ற உளவியல் நிலவரங்களை விளங்கிக்கொள்வதற்கு உளவியலும் இலக்கிய கட்டமைப்பு, அதிகார அசைவியக்கம் ஆகியவற்றை விளங்கிக்கொள்ள காலனித்துவமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### ஆய்வு வினாக்கள்

- அடையாளம் பற்றிய சிந்தனை அல்லது வாசிப்பு ஏன் முக்கியமானது?
- அடையாளம் பற்றிய சிந்தனையை தீர்மானிக்கும் காரணிகள் எவை?
- மலையகத் தமிழர் அடையாளம் என்பதிலிருந்து நாங்கள் எவற்றை புரிந்துக்கொள்கிறோம்?
- மலையகத் தமிழர் அடையாளம் பற்றிய புரிதல் ஈழத்தமிழ் ஆய்வு வரலாற்றில் ஏன் முக்கியமானது?
- மலையகத் தமிழர் பண்பாட்டை எழுதுவதன் மூலம் இலங்கைத் தமிழர் பண்பாட்டை புரிந்துக்கொள்ள முடியுமா?
- இலங்கை மலையகத் தமிழர் பற்றிய எழுத்து அல்லது வாசிப்பு என்பது உலகளாவிய பண்பாட்டு பயில்பரப்பில் எவ்வாறு பங்களிக்கக்கூடியது?
- அடையாளம் பற்றி உலகளாவிய சிந்தனை அல்லது கற்கை முறையியல் எப்படியுள்ளது?

### ஆய்வின் முடிவுகளும் உரையாடலும்

உலகளாவிய ரீதியில் பண்பாட்டு மற்றும் அடையாள நெருக்கீடுகளை எதிர்கொள்கின்ற ஒரு இனக்குழுமமாக தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழ் பண்பாட்டு அடையாளத்தின் ஒரு பகுதிதான்

மலையகத் தமிழ் பண்பாட்டு அடையாளம். மலையகத் தமிழ் பண்பாட்டு அடையாள இருப்பை கேள்விக்குள்ளாக்குவது ஒரு வகையில் ஈழத்தமிழ் பண்பாட்டு இருப்பு பற்றிய கேள்விகளை உருவாக்கும். மலையகத் தமிழ் பண்பாட்டையோ, இலக்கியத்தையோ, அதனுடைய வளத்தை இழத்தல் ஈழத்தமிழர் பண்பாட்டிற்கு உரிய காரியமல்ல. மாறி வருகின்ற இலக்கிய ஒழுங்கு பண்பாட்டு சூழலுக்கு ஏற்ப பாதுகாக்க வேண்டியதுடன் அதனுடன் ஏற்படுகின்ற சிந்தனைகள், கேள்விகள், தர்க்கங்கள் அடிப்படையில் இந்த இலக்கியங்களை அணுகி மீளக் கட்டவீழ்த்து, மீள வாசித்து, மீள கட்டுதல் மலையகத் தமிழர் என்ற அடையாளம் என்ற தனித்துவத்தையும் உலகளாவிய தமிழர் அடையாளம் என்பதையும் கட்டமைக்க முடியும். பண்பாட்டு அடையாளம், அடையாள அரசியல் இருப்பு பற்றிய கேள்விகளை எதிர்க்கொண்டு இருக்கின்ற இந்த சமூகத்தின் விடுதலைக்கான போராட்டத்தின் ஒரு அறிவார்ந்த பகுதியாக இந்த ஆய்வு இருக்கும். இதுவே ஆய்வின் முடிவுரையாகும்.

**தொகுப்பு**

மலையகத் தமிழர் பண்பாடு பற்றிய ஆய்வானது ஒற்றைப்படையானது அல்ல. அது பல்பரிமாண தன்மை கொண்டது. ஏனென்றால் ஒரு விடயப்பொருள் பற்றிய ஆய்வு உண்மையானதாகவோ, எல்லா காலக்கட்டத்திற்கு பொருந்தக்கூடியதாகவோ இல்லை. அது பற்றிய வாசிப்பு அல்லது புரிதல் பல்பரிமாணபட்டவை. ஆனால் இந்த ஆய்வு ஒரு வரையறுக்கப்படட அணுகுமுறையின் அடிப்படையிலேயே தமிழர் பண்பாட்டு அடையாளத்தையும் வரலாற்று இலக்கியத்தையும் அணுகியுள்ளது. ஆகையால் அந்தப் பண்பாடு பற்றிய ஆய்வு ஆய்வாளரின் பகுதியாக இருக்கின்றது தவிர அது முழுமுடிவாக, முடிந்த முடிவாக இல்லை. வேறொரு கோட்பாட்டை முன்வைத்து செய்வதன் மூலம் அதன் முழுமையைக் கொண்டு வரமுடியும். அத்தகைய முழுமையை நோக்கி மேற்கொள்ள வேண்டிய பல்வேறு துறைசார் ஆய்வுகளின் ஒரு பகுதியை இந்த ஆய்வு நிறைவு செய்கிறது.

**துணைநூல்கள்**

ஆபிரஹாம், ஜோசப். (1869). *கோப்பி கிருஷிக் கும்மி.* யாழ்ப்பாணம்.

சேரன், உ. (1985). *மரணத்துள் வாழ்வோம்.* விடியல் பதிப்பகம்.

டானியல், பாஸ். (2001). *மலையகத் தமிழர் அடையாளத்தின் பின்புல அமைவுகள்.* மார்க்கா வெளியீடு.

நித்தியானந்தன், மு. (2004). *கூலித்தொழில்.* கிழக்கு வீதி காமராஜ் நகர்.